# மாதர் போதினி

No. 284 செப்டெம்பர் 1921 No. 9

## THE KING AND THE PALACE OF FLESH

## மாமிச மாளிகையும் அதின் அரசனும்

விதவிதமாகவும் விநோதமாகவுங் கட்டப்பட்டுள்ள மாளிகைகள் பல உண்டு என்றாலும் மாமிச மாளிகையைப்போல் சிறப்புடையது இப்பிரபஞ்சத்தில் இல்லை. இம்மாட்சிமையான மாளிகையிலே மந்திரி பிரதானிகள் புடைசூழ வாழ்ந்துவரும் பிரபுவுக்கு 'இருதயம்' என நாமம் சூடப்பட்டிருக்கிறது. இவருடைய கண்ணுக்கு மணியைப்போன்ற அமைச்சன் 'நினைவு' என்பவரே. சில சமயம் இவர் 'எண்ணம்' என்றழைக்கப்படுவதுமுண்டு. நினைவென்னும் இந்த மந்திரி, இருதயமெனும் தனதரசனுடைய இஷ்டத்திற்கு நஷ்டம் உண்டாக இடங்கொடுப்பதைப்பார்க்கினும் தனதாவியைத் தியாகஞ்செய்வதே நலம் என விரதம்பூண்டவர். இவருடைய உள்ளான உபாய தந்திரங்களை உணர்ந்து ஓதக்கூடியவர் ஒருவர் இத்தாரணியில் இல்லை. இவர் 'கண்', 'செவி' என்னும் இரண்டு போர்ச்சேவகரை விசேஷமாகத் தெரிந்துகொண்டிருக்கிறார். இவ்விருவரும் இருதயமெனும் தங்கள் அரசனுக்கு உலகத்திலுள்ள சகலத்தையும் காண்பிக்கவும் தெரிவிக்கவும் மா பிரயோஜனமுள்ளவர்களானாலும் இவர்கள் அப்படிச் செய்யாமல், தங்கள் மன்னனாகிய இருதயம் என்பவருக்குப் பிரியம் எவைகளோ அவைகளை மாத்திரம் அறிவித்து, மற்றவைகளைக் கண்டும்காணாதவர்கள்போலவும், கேட்டும் கேளாதவர்கள்போலவும் இருந்துவிடுவது என்ன விபரீதம்! வேளா வேளையில் இருதயம் என்னும் மன்னனுக்கு ஆகாத ஏதாவதொன்றை கண் அல்லது செவி என்னுஞ் சேவகர்கள் காண்பித்து அல்லது தெரிவித்து விடுவார்களாயின் அவர் ஆறாத்துயரத்தில் அழுந்திக் கிடப்பதுமுண்டு. ஆஹா! இவ்வித காலங்களில்தான், இருதயமென்னும் மகிபனைத் தேற்ற எண்ணம் என்னும் மந்திரி எடுத்துக் கொள்ளும் பிரயாசங்களைக் காணலாம். இருதயமெனும் பிரபு தமக்

குச் சித்தமானதை எண்ணம் எனும் தமது மந்திரியின்மூலமாகவே முடித்துக்கொள்வதுண்மையானாலும், ஏதோ இடறி பிடிபடுங்காலை யில் என்னை யறியாமலே இது தீர்ந்தது எனப் பகருவது எண்ணம் எனும் மந்திரியின் இயல்பு. எண்ணம் என்பவர் தனது அண்ணல் இருதயம் என்பவரின் சித்தத்தை நிறைவேற்ற எழும்போதே, கண், செவி, வாய், மூக்கு, நாவு, கை, கால் என்பவர்களும் மற்று முள்ள ஊழியர் யாவரும் தங்களுக்கு என்ன கட்டளை விதிக்கப் படுமோவென எதிர்பார்த்த வண்ணமாக நிற்பார்களாயின் இவரு டைய பெருமையை எவரால் சொல்லிமுடியும்!

எண்ணம் என்பவரின் உத்தரவின்றி ஒருவரும் ஒன்றையுஞ் செய்யார்களென்பது சரியே, ஆனால் ஏதோ அபூர்வமாய் தவறிவிடு வதுமுண்டு. இக்காலங்களில் அற்ப செயல்களே ஒழிய வேறொன் றும் நிறைவேறாது. சில சமயங்களில் பயம் என்பவர் எதிர்படுவா ரானால், தான் விரும்பாத ஒன்றை மற்றவர்கள் செய்வதற்கு இடங் கொடுத்து சற்று ஒதுங்கி நிற்கும் குணம் இந்த எண்ணம் எனும் மந்திரிக்குண்டு. எண்ணம் எனும் இந்த மந்திரி எல்லாருக்கும் வேலை கொடுக்க மறந்தாலும் நாவு எனும் விசேஷித்த தூதனை ஒருபோதும் மறப்பதில்லை. நாவெனுந் தூதனுக்கு நிகரான தந்திரசாலி ஒருவரை மாமிச மாளிகையிற் தேடினும் காண்பதரிது. இந்த தூதன் வேளைக் கொரு வேஷமெடுத்து அநேகரை மோசம் போக்குவதிலேயே தன் நாட்களைக் கழித்து விடுவதுமுண்டு. விசேஷமாக மற்றவர் களுக்கு நேரிடும் பெருமையற்ற காரியங்களை எடுத்துப் பேசி, பரிதபிப்பவன்போல் நடித்து, உள்ளத்திலே பெரும்பகையை வைத் திருப்பவன் இவன். சில சமயம் நினைவென்னும் மந்திரி எழுந்து நின்று கோபமெனும் சேனைத்தலைவனைக் கூப்பிட்டு போர்க்களத் திற்கு அனுப்பும்போது, எல்லாருக்கும் முன்னே எதிரியின் படைக் குள் பாய்ந்துபோய், வார்த்தையெனுங் கூரிய அம்புகளால் அநேகரை வதைப்பவன் நாவென்னும் போர்ச்சேவகனே. நாவென்னுந் தூத னால் கெட்டுப்போனவர்கள் அநேகம் பேர். இவருடைய கூரிய அம்பாகிய வார்த்தையாற் புண்பட்டவர்கள் பிழைப்பதரிது. பொறு மையெனுஞ் சேனைத்தலைவனால், மாமிச மாளிகையின் போர்ச்சேவ கர்கள் நடத்தப்படும்போதோ, நாவென்னுஞ் சேவகன், உணர்வு, அச்சம், நாணம் என்பவைகளை முற்றிலும் விட்டு, தன்னைத்தான் மறந்தவனாக, முரட்டுமொழி, வஞ்சகச்சொல், நியாயக்கேடு என வழங்கப்பட்ட அக்கினியாஸ்திரங்களை சாமாரியாகப் பெய்வார். கண், செவி, கை, கால் என்னும் போர்வீரர்களும் மற்றுமுள்ள பராக்கிரம சாலிகளும் அநேக காரியங்களை நடப்பித்துவந்தாலும் நாவென்பவரைப்

போன்ற வல்லவர்களன்று. நிற்க, 'புருவம்' எனப் பெயர்பூண்ட ஓர் போர்ச்சேவகனுமுண்டு; இவனையோ எண்ணுவதற்கு எம்மாத்திர மென்றே சொல்லவேண்டும். ஆனாலும் இவன் பெருமையெனுஞ் சேனைத்தலைவனால் நடத்தப்படும்போது, தனது வளைந்த உடலை மேலும் மேலும் வளையவும் குறுங்கவுஞ் செய்து, தனக்கு எதிர் நோக்குபவர் எத்தகைய சிறப்பும் செல்வமு முடையாரானாலும், சற்றேனும் எண்ணுமற் அவர்கள் பதறும்படியாய், அலட்சியமெனும் அம்பை எய்வது இவனுக்கு மகா கஷ்டமானதன்று.

மெய்யாகவே போர்ச்சேவகர்களை உற்சாகப்படுத்துவதில் பெருமையெனுஞ் சேனைத்தலைவனைப்போல் வேறொருவருங் கிடையாது. இச்சேனைத்தலைவன் ஒவ்வொரு போர்வீரர்களுக்குமுள்ள அழகு, ஆண்மை, கல்வி, செல்வம் இவைகளை, இருப்பதற்கு எண் மடங்கதிகமாய் எடுத்துக் காட்டி, அவரவர்கள் தங்களைத் தாங்களே எண்ணுவதற்கதிகமாக எண்ணி இறுமாப்படையச் செய்யும் வல்லமையுடையவரென்பதினால் மாத்திரமே இவர் மகா சுத்தவீரன் எனக் காணப்படாதிருப்பாரோ? மேட்டிமையான கண் வணங்கா கழுத்து, கேளாச் செவி, மதியாத் தலை (தலை = அறிவு) இன்னும் இப்படிப்பட்ட பட்டங்களை போர்ச்சேவகர்கள் பெறுவது பெருமை யெனுஞ் சேனைத்தலைவரின் புண்ணியத்தினாலல்லவா? ஆனாலும் மித்திரியே! நமது மாமிச மாளிகையின் போர்ச்சேவகர்கள், அன்பு, அருள், அடக்கம், ஒழுக்கம், வாய்மை என இனிய பெயர்வகித்த சேனைத்தலைவர்களால் ஆளப்படவேண்டும். இவர்களுடைய குணங்கள் மாறாதிருக்க சுத்த இருதயம் எனும் அரசனையே முடி சூட்ட வேண்டும். இந்த நல் வேந்தனை நமது மாமிச மாளிகைக்குள் அரசுபுரியச்செய்வது வல்லதேவன்தம்மாலானதேயல்லால் நம்மாலாவது வேறெவராலாவது கூடியதன்றே. ஆகவே எல்லாம் படைத்துப் பின் பொல்லார் யாவரும் வானடைய தம்மைத்தாமே சிலுவையின் மரணத்திற் கொப்புக்கொடுத்து மூன்றாம் நாள் மரணத்தை ஜெயித்து உயிர்த்து பரமேறி தமது பிதாவின் வலதுபாரிசத்திலிருந்து நமக்காக வேண்டுதல் செய்யும் கருணைக்கடவுள், நமது இயேசு ரட்சகரின் திருத்தாளைத் துதித்தேற்றுவோமாக.

Solomon.

## LIFE OF LATE
## Mrs. ARULAMMAL NOAH GNANADICKAM

## கனம் அருளம்மாள் ஞானதிக்கம் அம்மாள் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

தன் கணவன் இறந்த அன்று அவர்கள் ஏகபுத்திரனாகிய வேதானந்தம் தேவசகாயம் என்பவருக்கு பிதாக்கள் ஊழிய வரிசையில் நியமுகம்செய்து சாஸ்திரியார் பட்டமும் சூட்டி, அவர்களுடைய பிதாக்களைப்போல இந்த வேதானந்த சாஸ்திரியாரும் ஞானச்சதுர்ப் பிரசங்கசாலையில் பிரசங்கிக்கவும் சபையின் நடுவே ஊழியம் செய்யவும் குருமார் பிரபுக்கள் சபையாரும் ஒருமித்து அங்கிகாரம் செய்தனர். தந்தையின் ஊழியம் செய்ய ஏகமைந்தன் அருகரானதும் அந்த அம்மாளுக்குத் துன்பத்தில் ஜோதி தோன்றினதுபோலாயிற்று. இவர்கள் தன் பத்தாவை இழந்து துயரசாகரத்தில் மூழ்கியிருந்தபோதிலும் நம்பிக்கையற்றவர்களைப்போலல்ல, ஏனெனில் அதற்கடுத்த ஓய்வுநாளில் தன் பிள்ளைகளைப் பார்த்து, ' இன்று எல்லாரும் கோவிலுக்குப் போங்கள்; நம்முடைய சுமைதாங்கி கர்த்தர் தான்; அவரிடத்தில் போனால்தான் நமது கவலை நீங்கும், துக்கம் மாறும்; ஆறுதலின் தேவனிடத்தில் போய் ஜெபித்து வாருங்கள்' என்று சொல்லி அனுப்பினார்கள். அப்படியே வீட்டிலுள்ள எல்லாரும் கோவிலுக்குப் போய் வந்தார்கள். தஞ்சை குருவாகிய கனம் பிளேக் ஐயரவர்கள் சங். நோவா ஞானதிக்க சாஸ்திரியாரவர்கள் மரணத்தைக் குறித்து ' என் ஆலயத்தின் அலங்காரமானவர், கோவிலுக்கும் சபைக்கும் பெரிய ஆசீர்வாதமானவரை இழந்துபோய்விட்டோம்' என்று அனுதாபப்பட்டாராம். ஏனெனில், அவர்கள் கவிப்பிரசங்க சாஸ்திரியார் எனப் பேர்பற்று பிரசங்க சாதுரியமுள்ளவர்களாய் இருந்தார்கள். இவர்கள் பின்னடியாருக்கு உலகப் பிரகாரமான சொத்து சுதந்தரங்கள் சேர்த்து மீதி வைக்காவிடினும் கர்த்தரே இவர்கள் பங்கும் சுதந்தரமுமாயிருந்து அன்றாடக போஷிப்புகள் அன்ன வஸ்திரம் குறைவுபடாது நடத்திவந்தார். இவர்கள் தம்பி சங். எலியா தேவசிகாமணி சாஸ்திரியாரவர்களும் தன் அண்ணியாரவர்களை மிக கண்ணியமாய் நடத்திவந்தார்கள். பொதுவாக ஊர் ஜனங்களும் குடும்பத்தார்களும் இவர்கள் சொல்லை மதித்து மரியாதையாய் நடத்திவந்தார்கள்.

இவர்கள் துன்பகாலத்திலும் பாட்டு, பிரசங்கம், குடும்ப ஜெப முறை தவருமல் நடத்திவருவார்கள். இந்த அம்மாள் எல்லா வெள்ளிக்கிழமையிலும் உபவாசமாக இருந்து தபசு காலங்களில் ஜெபத்தில் தரித்திருந்து 3 மணிக்குமேல் ஆகாரம் சாப்பிடுவார்கள். தேவ நற்கருணை சேரும்போதும் உபவாசமாயிருந்து ஸ்நானம் செய்து சுத்த வஸ்திரம் தரித்து சேருவார்கள். எப்போதும் சுத்தமாயிருக்க விரும்புவார்கள். 'மனம்போல வாழ்வு' என்றுற்போல, இவர்கள் தன் நேச பத்தாவை இழந்துபோனுலும் என்றும் மாருத இரட்சகரைப் பற்றிக்கொண்டதினுல் தாழ்ச்சியின்றி குறைபாடின்றி எல்லாம் ஒழுங்காய் நடத்தும்படி அவர்களின் ஏகபுத்திரனும் அவர் மனைவியும் கரிசனையாயிருந்தார்கள். அன்றியும் அவர்கள் பெண்மக்களில் தகுதியுள்ளவர்களும், சகோதரி மக்களில் எஸ்தர் கொர்நெலியுஸ் அம்மாளும், இவர்கள் மகள் Mrs. பால் அப்பாசாமி சொரணம் அம்மாளும் மாதாந்தர பண உதவி செய்துவந்தார்கள். பிள்ளைகளும் மற்றவர்களும் அனுப்பும் வஸ்திரங்களுக்காகவும் பண உதவிகளுக்காகவும் நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்து அவர்களுக்காக ஜெபித்து, தனக்கு கிடைத்ததில் ஏழைகளுக்கும் மற்றவர்களுக்கும் கொடுத்து சந்தோஷப்படுவார்கள். எந்த நன்மைகளிலும் ஏழைகளின் தருமத்தை மறக்கவேமாட்டார்கள். ஏனெனில், ஏழைகளுக்குக் கொடுக்கிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிருன்.

ஆண்டவர் கடைசி நியாயத்தீர்ப்புநாளில் பத்துக்கற்பனைகளின் படி நடந்தாயா என்காமல் 'பசியாயிருந்தேன், எனக்கு சாப்பாடு கொடுத்தீர்களில்லை; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்களில்லை; நிர்வாணமாய் இருந்தேன், எனக்கு வஸ்திரம் கொடுத்தீர்களில்லை; வியாதியாயும் காவலில் அடைபட்டுமிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்களில்லை' என்று குறைகூறுதபடி, காலம் இருக்கும் போதே நாம் தேவனுக்கும் பிறருக்கும் செய்யவேண்டிய கடமைகளைச் செய்ய தவருதிருப்போமாக. ஏனெனில், 'கிரியை இல்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது'; அன்றியும் 'கிரியை செய்யக் கூடாத இராக்காலம் வருமே', அதற்கு முன்னதாக நாம் செய்ய வேண்டிய நன்மையான காரியங்களைச் செய்யவேண்டும்.

அந்தியகாலம் இவர்களுக்கு என்பது வயதானபோது பலவீனமாகி கோவிலுக்கு நடந்துபோகக் கூடாமல் தள்ளாண்மையாயிற்று. அப்போ கோவில் முடிந்து வரும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளைப் பார்த்து, 'இன்றைக்கு யார் பிரசங்கம், என்ன வாக்கியத்தில், பிரசங்கத்தில் என்ன கருத்துக்கள் சொல்லப்பட்டது' என்று விவரமாய்க் கேட்பார்கள். அதினுல் பிள்ளைகள் யாவரும் பிரசங்கத்தைக் கவன

மாய்க் கேட்டு அம்மாச்சிக்கு வந்து சொல்ல முந்திக்கொள்வது வழக்கம். சிலவேளை 'நான் பாவி, கோவிலுக்கு வரக்கூடாமலிருக்கிறேனே' என்பார்கள். பிற்பாடு இருமுறை மரணத்திற்கேதுவான வியாதிப்பட்டார்கள். தேவகற்கருணை வீட்டிலேயே குடும்பத்துடன் சேர்ந்தார்கள். பிள்ளைகளும் கூடிவந்து அவரவர்க்கேற்ற ஆசீர்வாதங்கள் போடப்பெற்ருர்கள். அப்போதவர்கள் 'கர்த்தர் இப்போது என்னை அழைக்கவில்லை, உங்களுக்கும் இன்னும் சலிக்கவில்லை, ஆகையால் இன்னம் காலம் செல்லும்போலிருக்கிறது' என்ருர்கள். அந்தப்படியே தேவகிருபையினுல் சுகப்பட்டு நடமாடித்திரிந்து பேத்திமார் கலியாணங்களையும் கண்டு களிக்க கிருபைபெற்ருர்கள். பிற்பாடு வரவரத் தளர்ச்சியாகி படுக்கையில் இரண்டுமாதங்களாய் இருக்க நேரிட்டாலும், வாசிக்கக்கூடாமல் இருந்த காலத்தில் கர்த்தருடைய ஜெபத்தையும் ஞான உலா, ஜெபமாலை, பராபரன் மாலை முதலியவைகளில் தான் பாராயணம்பண்ணியிருந்த கவிகளை ஞாபகத்தோடே சொல்லிக்கொண்டே இருப்பார்கள்.

'உயிரிருக்கும் மட்டும் ஒருபோது முன்னை
அயராமல் போற்ற எனக்காசை பராபரனே'

என்று சாஸ்திரியார் பாடியதுபோல, மரணநாள் மட்டும் ஜெபத்தியானமாக இருந்தார்கள். தன் நல் மரணத்திற்காக தான் ஜெபிப்பதல்லாமல் மற்றவர்களையும் தனக்காக ஜெபிக்கவேண்டும் என்று தன்னைக் காண வரும் ஒவ்வொருவரிடமும் கேட்டுக்கொள்வார்கள். 'கர்த்தருடைய நேரமும் வேளையும் வரக் காத்திருக்கிறேன்' என்பார்கள்.

யாராவது அவர்களைக் காணப்போனுல் அவர்களை அன்போடு பார்த்து அருமையாய் விசாரித்து, 'கர்த்தருக்கு பயப்படும் பயத்தோடே நடவுங்கள், அவரைவிட்டு விலகாதேயுங்கள், கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்' என்பார்கள். இதுவே ஒரு நல்ல பிரசங்கம்போலிருந்தது. தன் படுக்கையிலிருந்த காலமெல்லாம் இதே வார்த்தைகளைப் பெரியோர் சிறியோர் யாராயினும் தன்னைப் பார்க்க வந்த யாவருக்கும் சொல்லி ஆசீர்வதித்தார்கள். அதைக் கேட்ட யாவருடைய இருதயத்திலும் அந்த சத்தம் தொனித்துக்கொண்டே நினைவு கூரப்படுகிறது. அதின்படி நடந்துகொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள். Rev. டக்கர் ஏசுவடியான் ஐயர் தஞ்சைக்கு வந்து அவர்களை முதல் விசையாகப் பார்த்தபோது சங். விசுவாச ஐயரவர்களுக்கு பதிலாக வந்த ஐயரவர்கள் என்று சொல்லக்கேட்டு 'சங். விசுவாச ஐயரவர்கள் இருந்ததுபோல சபையில் சமாதானமாக எல்லாரையும்

அனுசரித்து அன்பாயிருக்கவேண்டும்' என்று அவருக்குச் சொன்னார்கள்.

பின்னும் 'கர்த்தர் என்னை அழைக்கத் தாமதமாகிறதே' என்றும், 'நான் அவருடைய சித்தத்திற்குக் காத்திருக்கிறேன், அவர் சித்தம் நமது பாக்கியம்' என்றும் பலமுறையும் சொல்லுவார்கள். கர்த்தரை ஸ்தோத்திரிப்பதிலும் ஜெபிப்பதிலுமே தன் நாட்களைப் பின்னிட்டார்கள்.

'தேவனுக்குப் பிரியமானவனென்று, தான் எடுத்துக்கொள்ளப் படுமுன்னமே சாட்சிபெற்றான்' (எபி. 11 : 5) என்றதுபோல இவர்களைக் குறித்தும் சாட்சிபகரக் கூடியதாயிருந்தது.

## THE SPIRIT OF GOD IN US

## 'நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர்'

யாக். 4 : 5

தேவனுடைய பிள்ளைகளுக்கிருக்கும் ஒரு பெரிய சலாக்கியத்தை இவ்வசனத்தில் பார்க்கிறோம். அதாவது: 'விசுவாசி ஒவ்வொருவன் இருதயத்திலும் ஆவியானவர் வாசம்பண்ணுகிறார்' என்பதே. இதை தேவனுடைய பிள்ளைகள் உணர்ந்தார்களானால் கிறிஸ்தவ ஜீவியம் எவ்வளவு வல்லமையுள்ளதாயிருக்கும்!

தற்காலத்தில் அடிக்கடி கிறிஸ்தவர்கள்: 'ஆண்டவரே உம்முடைய ஆவியானவர் எங்களில் வாசம்பண்ணுவாராக!' என்று ஜெபிக்கிறதைக் காணலாம். விசுவாசியின் உள்ளத்தில் அவர் வாசம்பண்ணுகிறார் என்கிற சத்தியம் தெளிவாய் கிறிஸ்தவர்களுக்கு விளங்காததே இப்படிப்பட்ட தப்பிதமான ஜெபங்களுக்குக் காரணம். இதை நினையாமலும், ஜீவியத்தின் ஒவ்வொரு சிறு காரியத்தையும் ஆவியின் ஆளுகைக்கு ஒப்புக்கொடாமலுமிருக்கும்போது, ஆவியானவருக்காக ஜெபிப்பதில் பிரயோஜனமில்லை என்பது தெளிவாயிருக்கிறது. ஆவியானவர் நமக்கு அதிகமாய் வேண்டுமானால், நாம் நம்மை அதிகமாய் அவருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். நாம் நிரப்பப்படவில்லையென்றால் தடை அவரிடத்திலல்ல, நம்மிடத்திலேயே. அவர் நமக்குள்ளிருந்து நம்மை முற்றிலும் ஆட்கொள்ள வாஞ்சையுள்ளவராய்த் தவிக்கிறார். அவர் தம்முடைய வல்லமையான கிரியையை நம்மில் நடப்பிக்கவேண்டுமானால் நாம் கவனிக்கவேண்டிய சில குறிப்புகள் உண்டு.

திரம் செலுத்து. உன் வேலையிலிருந்து இரண்டு நிமிஷம் கிடைத்தாலும் இதை நினைத்து உன்னைத் தாழ்த்தி தேவனைத் துதி.

2-வது. ஆவியானவருடைய ஆளுகைக்கு உன்னை முற்றிலும் ஒப்புவி.

ஆவியானவர் உன்னில் கிறிஸ்துவின் சமுகமாக இருக்கிறார். உன்னுடைய எண்ணம் சிந்தனை முழுவதையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படுத்தி வைத்துக்கொள்ளுவார்—நீ மாத்திரம் உன்னை அவருக்குக் கையளித்துவிடு, அவர் உன்னில் பரிசுத்த ஜீவியத்தை உண்டாக்குவார். கிறிஸ்து உன்னில் வாசமாயிருக்கிறதினால் அவருடைய ஜீவியம் உன் ஜீவியமாகும்படி செய்வார்—நீ மட்டும் உன்னை அவருக்கு ஒப்புக்கொடு. அவருடைய நோக்கத்தை உன் நோக்கமாக்கு. 'தேவனே, ஆவியானவர் எனக்குள் வல்லமையாய்க் கிரியை செய்கிறதினால் கிறிஸ்து என்னில் வாசமாயிருக்கவும் நான் அன்பிலே வேரூன்றி நிலைபெறவும் செய்யும்' என்று ஓயாமல் காலையிலும் மாலையிலும் ஜெபி. இவ்விதமாய் நீ உன்னை அதிகமாய் ஆவியானவருடைய ஆளுகைக்கு ஒப்புக்கொடுப்பாயாகில் அதிகமதிகமாய் கிறிஸ்துவின் சமுகத்தில் ஜீவிப்பாய். ஆவியானவர் நம்மை ஆளும்படி வாஞ்சிக்கிறார். நம்மை நாடோறும் நிமிஷந்தோறும் அவருக்கு ஒப்புக்கொடுப்போமாக.

3-வது. உனக்குள் இருக்கிற ஆவியானவருக்குக் கீழ்ப்படி.

கொஞ்சத்தில் உண்மையாயிரு. அப்பொழுது அநேகத்தை உனக்குக் கொடுப்பார். உனக்குள் ஆவியானவர் இருக்கிறார் என்பதை உணர்ந்து பயபக்தியாய் நட. எந்தச் சிறுவிஷயத்திலும் அவரைத் துக்கப்படுத்தாதபடி எச்சரிக்கையாயிரு. அவருடைய சகல தூண்டுதலுக்கும் உடனே கீழ்ப்படி. இந்த விஷயத்தில் நாம் கவனமாயிருக்கிறதில்லை. நமக்குள்ளிருக்கும் ஆவியைக்குறித்து நாம் கவலைத் தாழ்ச்சியாயிருக்கும்போது ஆவியின் நிறைவை, ஆவியின் அபிஷேகத்தை, எப்படி நமக்குத் தருவார்? தேவனுடைய பிள்ளைகளே, உங்கள் சரீரம் தேவாவியின் ஆலயமாயிருக்கிறதே; உங்கள் சரீரத்தின் பழக்கவழக்கங்களில் ஆவியானவரைத் துக்கப்படுத்துகிற காரியங்கள் இல்லையா? உங்கள் நேரத்தைச் செலவழிக்கிற விதத்தில், உங்கள் பணத்தைச் செலவழிக்கிற விதத்தில், உங்கள் குடும்ப ஜீவியத்தில், நீங்கள் தேவனுக்குக் கொடுக்கவேண்டிய காணிக்கை விஷயத்தில், உங்கள் அடுத்த வீட்டுக்காரரோடு நடந்துகொள்ளுகிற விதத்தில்—ஆவியானவரைத் துக்கப்படுத்துகிற காரியங்கள் இல்லையா? அவர் அவைகளைக் காட்டும்படி பணிந்த சிந்தையோடு கேளுங்கள். ஆவியானவர் நம்மில் பலமாய்க் கிரியை செய்யாததற்குக் காரணம் நமக்குள்

**1-வது. ஆவியானவர் உனக்குள் இருக்கிறர் என்பதை விசுவா சித்து தேவனை ஸ்தோத்திரி.**

நீ தேவனுடைய பிள்ளை என்பதைப்பற்றி உனக்கு நிச்சயம் உண்டானால், உன்னில் எவ்வளவு பெலவீனமும் பாவமும் இருந்தாலும் ஆவியானவர் உனக்குள் இருக்கிறர் என்று நம்பு. கொரிந்து சபையைக் குறித்து அப்போஸ்தலன் என்ன சொல்லுகிறர் என்று பாருங்கள். 1 கொரி. 3: 1-4. அவர்கள்: 'மாம்சத்துக்குரியவர்கள்', 'குழந்தைகள்'; 'பெலனில்லாதவர்கள்', 'மனுஷ மார்க்கமாய் நடக்கிறவர்கள்' என்று இவ்வாருகப் பேசுகிறர். 'பொருமையும் பேதகங்களும் உங்களுக்குள்ளிருக்கிறது' என்றும் சொல்லுகிறர். ஆனாலும் இதே சபையாரைப் பார்த்துத்தான் அதே அதிகாரம் 16-ம் வாக்கியத்தில்": 'தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறரென்று அறியாதிருக்கிறீர்களா?' என்கிறர். ரோ. 8: 9ல் 'கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல' என்று வாசிக்கிறோம். நீ அவருடையவனு? அப்படியானல் கிறிஸ்துவின் ஆவி உனக்குள் இருக்கிறர் என்று நம்பு. எபேசியர் 1: 13, 14 பார். 'நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியால் முத்திரை போடப்பட்டீர்கள்' என்று சொல்லுகிறர். 'அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவி என்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறர்' என்று;2 கொரி. 1: 22ல் காணலாம். நீ இயேசுவை உன் இரட்சகராக விசுவாசித்திருக்கிறயா? அப்படியானல் உன் இருதயத்தில் ஆவியானவர் இருக்கிறர் என்று நம்பு.

'அவர் இருக்கிறது எனக்குத் தெரியவில்லையே' என்று சொல்லுகிறயோ? ஆவியானவர் உனக்குள் இருக்கிறதை உணர்ச்சியினல் அறியலாம் என்று நினைக்காதே. தேவன் மனுஷ சரீரமெடுத்து உலகத்தில் வாசம்பண்ணினபோது அவரை தேவன் என்று யாராகிலும் சொல்லக்கூடியதாயிருந்ததா? இல்லையே. அப்படியானல் பாவிகளாகிய நமக்குள் ஆவியானவர் வாசம்பண்ணுகிறதை நாம் உணரலாம் என்று நினைப்பதுகூடுமோ? காணப்படாதவைகளை நம்புகிறதே விசுவாசம். 'நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்.' ஆகையால் நீ ஒன்றும் உணராதிருந்தாலும் இதை நம்பு. உன் மனதில் இந்தச் சத்தியம் நன்ருய்ப்படத்தக்கதாக அடிக்கடி 'ஆவியானவர் எனக்குள்ளிருக்கிறர்' என்று திருப்பித் திருப்பிச் சொல். இயேசுவானவர் உலகத்துக்கு வந்தது அவருடைய அன்பினல்தான். நமக்காக மரித்தது அதிலும் அதிக அன்புதான். ஆவியானவர் மூலமாய் கிறிஸ்து நமக்குள் வாசம்பண்ணுகிறது ஆச்சரியத்திலும் ஆச்சரிய அன்பே. இதை உணர்ந்து, பணிந்து நின்று ஸ்தோத்

வாசம்பண்ணுகிற ஆவியானவருக்கு நாம் கீழ்ப்படியாததே. மனமறிய அவருக்குப் பிரியமில்லாத சிநேகிதரை நமக்குச் சிநேகிதராக்கு கிறோம். மனம் உள்ளே வாதித்தாலும், வெளியாக நியாயம் பேசிக் கொண்டு, ஆத்தும ஜீவியத்தைக் குளிரப்பண்ணும் காரியங்களில் நேரத்தைச் செலவிடுகிறோம். இனியாவது கீழ்ப்படிவோமாக. ஆவியானவர் நமக்குள்ளேயிருந்து நம்மை முற்றிலும் ஆளும்படி வாஞ்சைகொண்டவராகத் தவித்து ஏங்கி நிற்கிறார். அவரைத் தடங் கல் செய்யாதிருப்போமாக.

4-வது. ஆவியானவர் உள்ளேயிருந்து செய்யும் கிரியை என்ன வென்று அறிந்துகொள்.

ஆவியானவருடைய வேலை இரண்டு. அசுத்தம், பெருமை, கோபம், பொறுமை முதலியவைகள் எழும்புகிற நமது மாம்சத்தை அடக்கிக்கொள்ளுவது ஒன்று. இயேசுவை நமது இருதயத்தில் இருக்கிறவராக நமக்குக் காண்பிப்பது இன்னொன்று. 'நான் உங்க ளில் இருக்கிறதை நீங்கள் அந்நாளிலே அறிவீர்கள்' என்றார் (யோவா. 14 : 20). நம்மை ஆவியின் ஆளுகைக்கு ஒப்புக்கொடுக்க, ஒப்புக்கொடுக்க, இவ்விரண்டும் நம்மிடத்தில் அதிகமாய் விளங்கும் ஒவ்வொருநாளும் நமக்குத் தெரிந்த சகல விஷயங்களிலும் அவரே நம்மை நடத்தும்படி இடங்கொடுக்கும்போது, நமக்கு வரும் சகல சோதனைகளிலும் வெற்றிபெறுவோம்; இயேசுவின் பிரசன்னத்தால் திருப்தியாக்கப்படுவோம். சாகும்வரையும் மாம்சம் நமக்குள்தான் இருக்கும். ஆனால் அதிலும் வல்லமையுள்ள ஆவியானவர் அதை நிமிஷந்தோறும் காலுக்குள் வைத்துக்கொள்வார். நாம் அதைக் குறித்து நினைக்கவேண்டியதில்லை. நமது மாம்ச பெலத்தையும், சோதனைகளின் வல்லமையையும் நினைத்து நினைத்து சோர்ந்துபோக வேண்டியதில்லை. இயேசுவை நமக்குள் இருக்கிறவராக அறிந்து, அவரை அதிகமாய் நோக்கிப்பார்த்து, அவரை வஸ்திரம்போல் அணிந்துகொள்ளும்போது, மாம்சத்தின் வல்லமைக்கு இடமிராது. ஆவியானவரை நமது சோதனைகளையும், 'நான்' என்று எழும்பும் மாம்சத்தையும் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு, நாம் இயேசு வைப் பார்த்துக்கொண்டிருப்போமானால், அவரை அதிகமாய்த் தியானிப்போமானால், அவரோடு அதிகமாகப் பழகுவோமானால்— சோதனைகள் பயங்கரமாகத் தோன்றமாட்டாது. நம்முடைய சொந்த ஒன்றுமில்லாமையை உணருகிற நாம், வல்லமையுள்ள நேசராகிய அவர்மீது சார்ந்துகொண்டே இருப்போமானால் அவர் சகலத்தையும் பார்த்துக்கொள்ளுவார். இப்படி எப்போதும் இயேசுவில் சார்ந்து நிற்க மறந்துபோகிறேனே என்று சொல்லுகிறவர்கள் உண்டா?

அப்படிப்பட்டவர்கள் செய்யத்தக்கதைச் சொல்லுகிறேன். முதலாவது நீ செய்கிற சகல விஷயத்தையும் ஆவியானவர் முன்பாக நிறுத்தி, அவருக்குப் பிரியமில்லாததை உனக்குக் காட்டும்படி கேள். கீழ்ப்படிய பிரியமுள்ளவனாய் அவர் சமுகத்தில் நில். அவர் காட்டுகிறபடி செய். இப்படி கீழ்ப்படிந்தவுடனே இனி அவர்தாமே இயேசுவின் சமுகத்தை நிமிஷந்தோறும் உனக்கு நினைப்பூட்டும்படி தேவனிடத்தில் கேள். நிச்சயமாகவே அவர் செய்வார். விசுவாசத்தோடே இதையும் அவர்தாமே செய்யும்படி கெஞ்சு. வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.

5–வது. ஆவியானவருக்கு நேரங்கொடு.

நாடோறும் அதிகாலையில் ஆவியானவர் உன்னைத்தொட்டு, உன்னை நொறுக்கி, உன்னில் வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கும்படி நேரம் கொடு. ஒரு கல்தச்சனிடத்தில் கரடுமுரடான ஒருகல்லைக் கொடுத்து, அதில் அலங்காரமான ஒரு உருவை வெட்டும்படி சொல்லி அவனுக்குமாத்திரம் நேரம் கொடுத்தால், அவன் அதைத் தன் காலின்கீழ் போட்டு அதின் சகல கரடுமுரடையும் நீக்கி தன் மனதின்படி வெட்டிவிடுவானல்லவா? உனக்குள் ஆவியானவர் மூலமாய் பிரசன்னமாயிருக்கிற இயேசுவுக்கு நேரங்கொடு. நாடோறும் அவர் காலின்கீழ் பணிந்து விழுந்துகிட. அவர் உன்னைச் சோதிக்கவும், உன்னோடு பேசவும், உன்னை மறுரூபமாக்கவும், அவர் சமுகத்தில் அமைதியாய் நேரம் செலவழி. காலையில் மாத்திரமல்ல மாலையிலும், பகலில் மாத்திரமல்ல இராவில் உனக்கு நித்திரை வராமல் உன் படுக்கையில் கிடக்கும்போதும் ஆவியானவர் உன்னில் தமது கிரியையை நிறைவேற்றி, தேவனுடைய சகல தயையுள்ள சித்தத்திற்கும் ஏற்க உன்னைச் சீர்பொருந்தப்பண்ண அவரை நோக்கிக் கெஞ்சு. அப்பொழுது உன்னில் ராஜாவாக வீற்றிருக்கும் இயேசுவின் சிங்காசனத்தின் கீழ் இருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் மற்றவர்களுக்குப் பாய்ந்துகொண்டேயிருக்கும். (யோவா. 7 : 39 ; வெளி. 22 : 1.)

அவர் உன்னைப் பிடித்திருக்கிறார். நீ மாத்திரம் பொறுமையோடு அவருக்குக் காத்திருப்பாயாகில் தமது சித்தத்தை உன்னில் நிறைவேற்றுவார். நாடோறும் அவர் பாதத்தில் விழு—அதுதான் உன் கடமை; நாடோறும் அவர் உன்னை நொறுக்கும்படி கேள்—அதுதான் உன் வேலை; இயேசுவின் பாதத்தருகே—அதுதான் உன் இடம். உன்னைப்பற்றி உனக்கு இருக்கும் வாஞ்சையைவிட அவருக்கு அதிக வாஞ்சையுண்டு. அதற்காகவே உனக்குள்ளிருக்கிறார். அவர் நினைத்ததை நிறைவேற்றவே செய்வார். வல்லமை

யுள்ள, அன்புள்ள அவர் கரத்தில் உன்னைத் தாராளமாய் வைத்துவிடு. 'என் ஆத்துமாவே தேவனையே நோக்கி அமர்ந்திரு; நான் நம்புகிறது அவராலே வரும்.'

## PRAISE THE LORD FOR HE IS GOOD

## 'கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது'

இது கர்த்தாவுக்கு மகா பிரியமான ஒரு கீதம். பழைய ஏற்பாட்டில் பல இடங்களிலும், விசேஷமாய் சங்கீத புஸ்தகத்திலும் இது பலமுறை வருகிறது. இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய விசேஷித்த பண்டிகை நாட்களில் இந்த ஒரே வாசகத்தையே 'மாறி மாறி'ப்பாடுவார்கள். இந்தப் பல்லவியைப் பாடும்போதெல்லாம் பரிசுத்த தேவன் அதைக்கேட்டு மகா மகிழ்ச்சியடைந்து தமது ஜனத்தை ஆசீர்வதித்திருக்கிறார். ஒரே பாட்டை பலமுறை ஒரே நேரத்தில் பாடக்கேட்பது நமக்குப் பிரியமாயிருக்கிறதில்லையே. கர்த்தாவுக்கு இந்தப் பாட்டின்மேல் மகா பிரீதியிருப்பதற்குக் காரணமென்ன? இதை ஓயாமல் பாடக்கேட்பது அவருக்குப் பிரியமாயிருப்பானேன்?

முதலாவது: இது கர்த்தாவுடைய இருதயத்துக்கு ஏற்றவனென்றழைக்கப்பட்ட தாவீது ராஜா, தன் அனுபவத்திலிருந்து, கர்த்தாவின் மேல் பாடின பாட்டு. தெய்வபக்தனே, நீ உன் ஆண்டவர் பேரில் உள்ள அன்பால் பொங்கிச்செய்யும் ஒவ்வொரு அற்பக் காரியமும் அவருக்கு மகா அருமையாயிருக்கிறது. இங்கிலாந்தில் கூப்பர் என்ற ஒரு பக்திமான் இருந்தார். அவர் இறந்தபின் நூறு வருஷங்களாக கிறிஸ்து சபை அவர் கட்டிய அருமையான பாடல்களைக் கொண்டு கர்த்தரைத் துதித்து வந்திருக்கிறது. சுவிசேஷ கீதத்திலிருந்து நாம் பாடுகிற 'பூலோகத்தாரெல்லாருக்கும் ஓர் ஜீவ ஊற்றுண்டே', 'பாவிகேள் உன் ஆண்டவர்' (சுவி. கீ. 7, 49) என்ற பாட்டுகள் அவர் இயற்றியவைகளே.

இரண்டாவது: 'கர்த்தர் நல்லவர்' என்ற வாசகம் அவரைப் பற்றிய சரியான விஸ்தரிப்பாயிருக்கிறது. 'தேவன் அன்பாகவே இருக்கிறார்' என்பது அதற்குச் சரியான புதிய ஏற்பாட்டு வாசகம். கர்த்தாவுடைய இருதயத்துக்கு ஏற்றவன் 'கர்த்தர் நல்லவர்' என்று பாடினன். கர்த்தராகிய கிறிஸ்துவின் இருதயத்தில் சாய்ந்திருந்தவன் 'தேவன் அன்பாகவே இருக்கிறார்' என்று எழுதினன். அதுவு

மன்றி, 'அவர் கிருபை என்று முள்ளது' என்பதில் உத்தம மனிதனின் விஸ்தரிப்பு அடங்கியிருக்கிறது. மனிதன் தேவகிருபைக்காகக் கெஞ்சவேண்டிய தரித்திரனும், நிர்ப்பந்தனும், நீசனுமாயிருக்கிறன். தேவகிருபை இல்லாவிடில் மகா பெரிய பரிசுத்தவானும் பிசாசின் மகனேயல்லாமல் மனிதனல்ல. கர்த்தர் 'கிருபையின் ஐசுவரியம்' உள்ளவர். தரித்திரனுக நிமிஷந்தோறும் கிருபையைப் பெற்று, கிருபையில் நிலை நின்று, கிருபையின் நன்மைகளால் திர்ப்தியடைந்து, கர்த்தாவைத் துதிக்கக்கூடியவனே தேவ பார்வையில் உத்தம மனிதன். இவ்விதமாய் கர்த்தாவையும் மனிதனையும் பற்றி மகா சிறந்த இலட்சணங்களடங்கிய இந்த வாசகம் ஆண்டவருக்கு அதிகப்பிரியமாயிருப்பது ஆச்சரியமல்லவே!

**மூன்றுவது:** பழைய பாட்டை புதிய இருதயங்கள் பரிசுத்த ஆவியானவரால் அனல் மூட்டப்பட்டுப் பாடும்போது, கர்த்தாவுக்கு மகா பிரீதியாயிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. மகா அருமையான பாட்டுகளும் தமிழ் நாட்டு சபைகளில் யாதொரு பயபக்தியுமின்றிப் பாடப்படுகிறது. கர்த்தாவே, எதுவரைக்கும் இவ்வித 'வீணன' ஆராதனைகளால் நீர் வாதிக்கப்படுவீர்! பரிசுத்த அலங்காரத்தோடும் பரிசுத்த பயபக்தியோடும் உம்மை நாங்கள் தொழுதுகொள்ளும் காலம் எப்போ வரும்! கிறிஸ்தவ ஆராதனைகளில் காணப்படுகிற பயபக்தியின்மை மகா பயங்கரமாயிருக்கிறது. அஞ்ஞானி எத்தனை பயபக்தியுடன் சாஷ்டாங்கமாய் விழுந்து பணிகிறன். பரிசுத்த தூதரே, நீங்கள் எத்தனை வணக்கமாய் நின்று சேவிக்கிறீர்கள்! மகிமையடைந்த பக்தர் சிங்காசனத்தின்முன் சாஷ்டாங்கமாய் விழுந்து தொழுதுகொள்ளுகிறர்கள். நரகத்தின் மகனுன பாவியோ, ஆராதனை நேரத்தில் உல்லாசமாய்ப் பேசிச் சிரித்து, கர்த்தரைப் பரீட்சை பார்க்கிறன். இங்கே பணிந்து ஆராதிக்கக்கூடாதபடி வணங்காக் கழுத்துள்ளவன் பரலோகத்தில் சாஷ்டாங்கமாய் விழுவானே? கர்த்தாவுடைய சன்னிதியில் பயபக்தியில்லாதிருப்பது எத்தனை பாதகமும் மோசமுமான காரியம் என்பதை ஆண்டவரே உணர்த்துவாராக! கிறிஸ்தவனே, நீ ஆலயத்தில் நடந்துகொள்ளுகிற விதமாய் உன் மேலதிகாரிமுன் அல்லது உன்னுடைய உலக ராஜாமுன் நடந்துகொள்வாயா? நசல்கொண்ட ஆடுகளைப் பலியாகச் செலுத்தின யூதரைப் பார்த்து, ஆண்டவர், 'அதை நீ உன் அதிபதிக்குச் செலுத்து, அவன் உன்மேல் பிரியமாயிருப்பானே? உன் முகத்தைப் பார்ப்பானே' என்று கேட்கிறர். (மல். 1: 8.) ஆராதனையில் அவபக்தியாயிருப்பவர்களையும் பார்த்து அவர் இதே விதமாய்க் கேட்கிறர். பாடினுலும் ஜெபித்தாலும் உள்ளத்தில்

உண்மையைக்காண அவர் விரும்புகிறார். 'நான் பாடும்போது என் உதடுகளும் நீர் மீட்டுக்கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும்' என்று உண்மையாய்ச் சொல்லக்கூடியவர்களே கர்த்தாவுக்குப் பிரியமானவர்கள். அப்படிப்பட்டவர்கள் பாடும் கீதமும் அவருக்கு மகா அருமையே!

இவ்விதமாய் உத்தம தேவப்பிரியரால் கர்த்தாவுடைய சிறந்த இலட்சணங்களை அமைத்துக் கட்டப்பட்டு பயபக்தியாய் ஆராதிப்பவர்களால் முழு இருதயத்தோடும் பாடப்படுகிற பாட்டுகள், அவைகள் ஓயாமல் ஆயிரம் தரம் திருப்பிப் பாடப்பட்டபோதிலும், கர்த்தாவுக்கு மகா அருமையாயிருக்கிறதென்று பார்க்கிறோம். இம்முகாந்தரத்தினாலேதான் 'சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல்' நித்தியகாலமாய்ப் பாடப்படும் பாட்டு கர்த்தாவுக்கு ஒருக்காலும் வெறுப்பாகவேமாட்டாது. மனுப்புத்திரரே, பூலோகத்தின் ஆராதனையைப் பரலோகத்தின் ஆராதனைக்கு ஒப்பாக்க நாம் முயலுவோமாக!

இந்தச் சிறுகீதம் பழைய ஏற்பாட்டில் பல விசேஷித்த சமயங்களில் பாடப்பட்டிருக்கிறது. அவைகள் ஒவ்வொன்றும் நமக்கு நல்ல போதனை அடங்கியதாயிருக்கிறது.

**முதலாவது:** உடன்படிக்கைப் பெட்டியை தாவீது ராஜா மகா ஆடம்பரத்தோடு எருசலேமுக்குக் கொண்டுவந்தபோது இந்தக் கீதத்தைப் பாடினார். (1 நா. 16: 7, 41.) உடன்படிக்கைப் பெட்டி தேவ சமுகத்துக்கு அடையாளமாயிருந்தது. அது பெலிஸ்தரால் பிடிப்பட்டபோது, 'மகிமை இஸ்ரவேலைவிட்டு விலகிப்போயிற்று.' (1 சா. 4: 22.) திரும்ப அது இஸ்ரவேலின் தலைநகரிக்குக் கொண்டுவரப்பட்ட நாள் மெய்யாய் மனமகிழ்ச்சியின் நாளே. அன்று 'தாவீது தன் முழுபலத்தோடும் கர்த்தருக்கு முன்பாக நடனம் பண்ணினான்.' அன்று அந்த பக்தனால் இந்தப் பாட்டு இயற்றப்பட்டு முதல் முதல் பூமியில் பாடப்பட்டது. கிறிஸ்தவனே, உன் இரட்சகர் உன் இருதயத்தில் முதல் முதல் வந்த உன் மீட்பின் நாள் இவ்வித பாக்கிய நாளாய் உனக்கு இருக்கவில்லையா? ஏதேனில் இழந்த தேவசமுகம் அன்று உன் இருதயத்தில் திரும்ப வந்தது. பாவமன்னிப்பை திட்டமான ஒரு அனுபவமாக திட்டமான ஒரு நாளில் பெற்ற கிறிஸ்தவனே, நீ அந்த நாளில் ஆனந்த மகிழ்ச்சியடைந்து, இந்தப் பாட்டைப்போலொத்த ஒரு பாட்டினால் உன் ஆண்டவரைத் துதிக்கவில்லையா?

(இன்னும் வரும்.)

## STAMPS FOR LETTERS AND POST CARDS

## கடிதங்களுக்கும் தபால் கார்டுகளுக்கும் ஒட்டவேண்டிய ஸ்டாம்புகள்

### NEW RULES

### புதிய சட்டங்கள்

**உங்களுடைய அயலாரையும் தயவுசெய்து எச்சரிக்கவும்**

1921-ம் வருஷம் எப்ரல் மாதம் 18-ம் தேதி முதற்கொண்டும் அதன் பிற்பாடும், இந்தியாவில், அடியில்கூறிய ஸ்டாம்புகள் தபாலுக்கு ஒட்டவேண்டியவையாகும் :—

தபால் கார்டுகள் முன்போலவே ... ... ... $\frac{1}{4}$ அணா.

**கடிதங்கள்**

$\frac{1}{2}$ தோலா இடைக்கு மேற்படாத கடிதத்திற்கு ... $\frac{1}{2}$ அணா.

$\frac{1}{2}$ தோலாவுக்குமேல் 1 தோலாவுக்கு உட்பட்ட கடிதத்திற்கு ... ... ... ... ... $\frac{3}{4}$ அணா.

1 தோலா இடைக்குமேல் $2\frac{1}{2}$ தோலா வரைக்கும் உள்ள கடிதத்திற்கு ... ... ... ... 1 அணா.

இதற்கு மேற்பட்ட ஒவ்வொரு $2\frac{1}{2}$ தோலாவுக்காவது அதன் பாகத்திற்காவது ... ... ... 1 அணா.

**பத்திரிகைகள்**

8 தோலா இடைக்கு மேற்படாதவைகளுக்கு ... $\frac{1}{4}$ அணா.

8 தோலாவுக்கு மேற்பட்டு 20 தோலா வரைக்கும் உள்ள பத்திரிகைகளுக்கு ... ... ... $\frac{1}{2}$ அணா.

20 தோலாவுக்கு மேற்பட்ட ஒவ்வொரு 20 தோலா இடைக்கோ அல்லது அதன் பாகத்திற்கோ ... $\frac{1}{2}$ அணா.

**புஸ்தகங்களும் மாதிரி கட்டுகளும்**

ஒவ்வொரு ஐந்துதோலா இடைக்கும் அதன் பாகத்திற்கும். $\frac{1}{2}$ அணா.

## மணி ஆர்டர்கள்

அதே தேதி முதற்கொண்டும், அதன் பிற்பாடும், அடியிற்கண்டபடி கமிஷன் சார்ஜ் வாங்கப்படும்.

10 ரூபாய்க்கு மேற்படாத தொகைக்கு ... ... 2 அணு.

10 ரூபாய்க்குமேல் 25 ரூபாய்வரைக்கும் ... ... 4 அணு.

25 ரூபாய்களுக்கு மேற்பட்ட தொகைக்கு.—ஒவ்வொரு 25 ரூபாய் தொகைக்கு 4 அணுவும், மீதி ரூபாய் 10 ரூபாய்க்கு மேற்பட்டால் 4 அணுவும், 10 ரூபாய் மேற்படாவிட்டால் 2 அணுவும், சார்ஜ் செய்யப்படும்.

## வீ. பீ. மூல்யமாய் அனுப்பப்பட்ட சாமான்கள்

அதே தேதி முதற்கொண்டும், அதன் பிற்பாடும், அடியிற்கண்டவீதம் வீ. பீ. சாமான்களின் தொகையின்மேல், சார்ஜ்செய்யப்படும்.

வீ. பீ. சாமான்களின் பேரில் வசூல் செய்யவேண்டிய பணம் 10 ரூபாய்க்கு மேற்படாமலிருந்தால் ... 2 அணு.

10 ரூபாய்க்கு மேற்பட்டும் 25 ரூபாய் வரைக்குமிருந்தால் 4 அணு.

25 ரூபாய்க்கு மேற்பட்ட தொகைக்கு.—ஒவ்வொரு 25 ரூபாய் தொகைக்கு 4 அணுவும், மீதி 10 ரூபாய்க்கு மேற்பட்டால் 4 அணுவும், 10 ரூபாய்க்கு மேற்படாவிட்டால் 2 அணுவும் சார்ஜ் செய்யப்படும்.

C. L. S. PRESS, MADRAS—1921